திரு. இரா. வில்வநாதன்: இந்தத் திருக்கோயிலுக்குச் சம்பந்தமான பணம் கட்டுவதற்குண்டான அரசு ஆணை வழங்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு கூடிய விரைவிலே காவேரிப்பாக்கத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆளுகைக்குட்பட்ட அந்த நிலத்திற்கு 1,42,041 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து அதை நிலமாற்றம் செய்வதற்கு அந்தத் துறை ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகையையும் பொதுமக்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்ற நடவடிக்கை எடுப்பதற்கு வேலூர் துணை இயக்குநர் அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்றப் பணி முடிக்கப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

77—

குடிநீர்

***2093-அ—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஒன்றியம், தோடனேரி பஞ்சாயத்து, கல்லிக்குடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தோடனேரி ஊராட்சியிலுள்ள கல்லிக்குடி குடியிருப்பில் தற்போதைய மக்கள் தொகை 700 ஆகும். தற்போது ஆழ்துளைக் கிணறு இரண்டும்,

2001 செப்டம்பர் 11]

விசைப்பம்பு ஒன்றும் இக்குடியிருப்பில் உள்ளன. இக்குடியிருப்புக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 24 லிட்டர் ஆகும். மேலும் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, சோதனையோட்டத்தில் உள்ளது. சோதனையோட்டம் முடிந்தவுடன் இத்திட்டம் பராமரிப்பிற்காக தோடனேரி ஊராட்சி வசம் ஒப்படைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லிக்குடி கிராமம் என்பது சமயநல்லூர், பரவை ஆகிய இரண்டு ஊர்களுக்கும் பக்கத்தில் உள்ள கிராமம். கடந்த 5 ஆண்டு காலமாக ** என்று கேள்விப்பட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொன்னம்பலம் சொன்ன அந்தத் தகவல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பொன்னம்பலம், கல்லிக்குடிக்குத் தண்ணீர் கேளுங்கள்.

திரு. ப. பொன்னம்பலம்: ** கடந்த 5 ஆண்டு காலமாக அந்தக் கிராமம் ஒரு தீவுபோலக் காட்சியளித்தது. மக்கள் அனைவரும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று சொல்லி wall poster எல்லாம் அடித்து ஒட்டினார்கள். பிறகு நான், அங்குள்ள மற்ற கிளைச் செயலாளர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு போய், கண்டிப்பாக அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைய ஏற்பாடு செய்து தருவேன் என்று சொன்னதோடு, நான் உங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருகிறேன் என்றும் கூறினேன். அடுத்தபடியாக அங்கே சாலை வசதி இல்லை. ஆகவே, சாலை வசதியும், உங்களுக்குச் செய்து தருவேன் என்று சொல்லி, பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றும் சொன்னேன். அதேபோல தொகுப்பு வீடுகளும் அங்கே இடிந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடிதண்ணீர் மட்டும்தான் கேள்வி. அதுசம்பந்தமாக மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) கல்லிக்குடி கிராமத்திற்குக் குடிதண்ணீர் ஏற்பாடு செய்வீர்களா என்று கேளுங்கள். (குறுக்கீடு) திரு. பொன்னம்பலம், உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2001 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது** சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அவர் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

வினா எண் 78. திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

78—

நியாயவிலைக் கடை

***2476—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, தோப்புக்கொல்லையில் நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குள்ளஞ்சாவடிக்கு அருகில் தோப்புக்கொல்லை என்ற கிராமம் இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தொலை தூரத்திற்குச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.